# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**மனு எண். 894/நகராட்சி/2019**
**நாள் : 29/07/2019**

**திரு J. பாலசுப்பிரமணியன்,**
**கூத்தப்பாக்கம் – 607 002.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்கள் மற்றும்**
**மண்டல அலுவலர்கள்,** – **எதிர் மனுதாரர்கள்**
**சென்னை மாநகராட்சி.**

கடலூர் மாவட்டம், கூத்தப்பாக்கம், 56, விஜயலட்சுமி நகர் விரிவு என்ற முகவரியில் வசிக்கும் திரு J. பாலசுப்பிரமணியன் அவர்களின் 19.07.2019 நாளிட்ட மனு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், கூத்தப்பாக்கம், 56, விஜயலட்சுமி நகர் விரிவு என்ற முகவரியில் வசிக்கும் ஓய்வு பெற்ற நகராட்சிப் பொறியாளர் திரு J. பாலசுப்பிரமணியன் என்பவர் தான் பணியாற்றிய கீழ்க்காணும் நகராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களிடமிருந்து தனது சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மனுதாரர் பணியாற்றிய நகராட்சிகள் மற்றும் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் விவரம் வருமாறு :-

| | | | |
|---|---|---|---|
| (1) | சிதம்பரம் நகராட்சி | : | டிராப்ட்ஸ்மேன் (ம) ஓவர்சீர் |
| (2) | காஞ்சிபுரம் நகராட்சி | : | இளநிலைப் பொறியாளர் |
| (3) | விழுப்புரம் நகராட்சி | : | நகராட்சிப் பொறியாளர் |
| (4) | அம்பத்தூர் நகராட்சி | : | உதவி செயற்பொறியாளர் |
| (5) | கத்திவாக்கம் நகராட்சி | : | நகராட்சிப் பொறியாளர் |

மேற்குறிப்பிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் அம்பத்தூர் நகராட்சியும், கத்திவாக்கம் நகராட்சியும் சென்னை மாநகராட்சியுடன் 2011–ஆம் ஆண்டு முதல் இணைக்கப்பட்டுள்ளன.

2. முறையீட்டு மனுதாரர் திரு J. பாலசுப்பிரமணியன் மேற்குறிப்பிட்ட நகராட்சிப் பகுதிகளில் 07.03.1980 முதல் 31.01.2011 முடிய பணியாற்றியுள்ளார். கத்திவாக்கம் நகராட்சியில் ( தற்பொழுது திருவொற்றியூர் மண்டலம், சென்னை மாநகராட்சி) நகராட்சிப் பணியாளராகப் பணியாற்றிய பொழுது 31.01.2011–இல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளார்.

3. ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, கடைசியாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற நகராட்சிகளிலேயே சேமநலநிதித் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகை வழங்கப்படவேண்டுமென 29.02.2008 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை எண்.9019/08/எல்3–இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின்

அடிப்படையில் முறையீட்டு மனுதாரர் கடைசியாகப் பணியாற்றிய கத்திவாக்கம் நகராட்சி தற்பொழுது சென்னை மாநகராட்சியின் திருவொற்றியூர் மண்டல அலுவலருக்கு உரிய விவரங்களுடன் முறையாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. மேலும் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள்/ மண்டல அலுவலர்கள் முறையீட்டு மனுதாரரின் பணி சம்பந்தப்பட்ட விவரங்களை திருவொற்றியூர் மண்டல அலுவலருக்கு வழங்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள், 29–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு J. பாலசுப்பிரமணியன்,
   56, விஜயலஷ்மி நகர் விரிவு,
   கூத்தப்பாக்கம்,
   கடலூர் – 607 002..

2. மண்டல அலுவலர்,
   திருவொற்றியூர் மண்டலம்–1,
   சென்னை மாநகராட்சி,
   947, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
   திருவொற்றியூர், சென்னை–19.

நகல் :

1. நகராட்சி ஆணையர்,
   சிதம்பரம் நகராட்சி,
   சிதம்பரம், கடலூர் மாவட்டம்,

2. நகராட்சி ஆணையர்,
   காஞ்சிபுரம் நகராட்சி,
   காஞ்சிபுரம் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
   விழுப்புரம் நகராட்சி,
   விழுப்புரம் மாவட்டம்,

4. மண்டல அலுவலர்,
   அம்பத்தூர் மண்டலம்,
   அம்பத்தூர், சென்னை.

5. முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
   பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
   பேரூராட்சி பிரிவு – 3
   இ.கோ. / உதிரி